செ.வெ.எண்:20 நாள்:11.09.2020

கரூர் மாவட்டம்

**கொரோனா தொற்று பரவலை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக தாந்தோன்றிமலை அருள்மிகு வெங்கட்ரமணசுவாமி திருக்கோவிலில் புரட்டாசித்திருவிழாவில் தமிழக அரசின் வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டே பக்கதர்கள் அனுமதிக்கப்படுவர் - இந்த ஆண்டு தேரோட்டம ரத்து செய்யப்பட்டுள்ளது - மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்**

அதன் விபரம் வருமாறு:

கரூர் மாவட்டத்தில் பிரசித்திபெற்ற தாந்தோன்றிமலை அருள்மிகு வெங்கட்ரமணசுவாமி திருக்கோவிலில் நடைபெறவுள்ள புரட்டாசி திருவிழாவினை கொரோனா வைரஸ் தொற்று பரவாத வகையில் பாதுகாப்பாக நடத்துவது குறித்து எடுக்கப்படவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக சம்மந்தப்பட்ட துறை அலுலவர்களுடன் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று(11.09.2020) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் தலைமையில் ஆலோசனைக்கூட்டம் நடத்தினார்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளதாவது:

உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் கொரோனா தொற்றில் இருந்து மக்களைக் காப்பாற்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. சுகாதாரத்துறை, வருவாய்த்துறை, வளரச்சித்துறை, காவல்துறை என அனைத்துத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு கொரேனா தொற்று தடுப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், கரூர் மாவட்டத்தில் தாந்தோன்றிமலை அருள்மிகு வெங்கட்ரமணசுவாமி திருக்கோவிலில் ஆண்டுதோறும் வெகுவிமர்சையாகக் கொண்டாடப்படும் புரட்டாசித்திருவிழா இந்த ஆண்டு தமிழக அரசின் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றியே நடத்தப்படும்.

எந்த வகையிலும் கொரோனா தொற்று பரவிவிடக்கூடாது என்ற நோக்கத்தில், மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது. அதனை திருக்கோவிலுக்கு வரும் பக்தர்கள் முறையாக கடைபிடிக்க வேண்டும்.

1. நடைதிறப்பு நேரம் காலை 5.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை மட்டும் இருக்கும்.
2. இந்த ஆண்டு புரட்டாசி மாத முக்கிய நிகழ்வான திருத்தேராட்டம் அரசு வழிகாட்டு நெறிமுறைகளின் படி நடைபெறாது.
3. அன்னதானம் வழங்குபவர்கள் திருக்கோயில் மற்றும் உணவு பாதுகாப்பு அலுவலர் அனுமதி பெற்று சுகாதாரமான முறையில் திருக்கோயில் நிர்வாகத்தினர் அனுமதிக்கும் இடத்தில் உணவுப் பொட்டலங்களாக மட்டுமே வழங்க வேண்டும்.
4. திருக்கோயிலைச் சுற்றி தற்காலிக கடைகள் வைக்க அனுமதி இல்லை.
5. பக்தர்கள் உணவு தயார் செய்து சாப்பிட அனுமதி இல்லை. திருக்கோயில் வளாகத்தில் உணவு அருந்தவோ, உட்காரவோ அனுமதி கிடையாது.
6. பக்தர்கள் கால்களை நீரில் சுத்தம் செய்து பின் கிருமி நாசினி கொண்டு கைகளை சுத்தம் செய்த பின்பு தான் திருக்கோயில் உள்ளே நுழைய வேண்டும். பக்தர்களின் உடல் வெப்பநிலை அறியும் தெர்மல் ஸ்கேனர் கொண்டு பரிசோதித்த பின்பு தான் திருக்கோயில் உள்ளே நுழைய வேண்டும். கண்டிப்பாக அனைவரும் முகக்கவசம் அணிந்து, சமூகவிலகலை கடைபிடிக்க வேண்டும்.
7. தடை செய்யப்பட்ட பகுதியிலிருந்து (Containment zone) வருபவர்கள், சமூக இடைவெளியைப் பின்பற்றாதவர்கள் மற்றும் முககவசம் அணியாமல் வருபவர்களுக்கு திருக்கோயிலுக்குள் நுழைய அனுமதி இல்லை அவ்வாறு வருபவர்களுக்கு அனுமதி மறுக்கப்படும்.

8. 65 வயதிற்கு மேற்பட்டவர்கள் உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், சுவாசம் தொடர்பான நோய், இருதய நோய் போன்ற இணை நோய் கொண்டவர்கள் கர்ப்பிணி பெண்கள், 10 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் ஆகியோர் திருக்கோயிலுக்கு வருகை புரிவதை தவிர்க்க வேண்டும்.

9. திருக்கோயில் முன்பு பக்தர்கள் கூடி தாங்களாகவே தேங்காய் உடைத்தல் சூடம் வைத்தல் மற்றும் நெய் விளக்கு ஏற்றுதல் போன்றவற்றிற்கு அனுமதி இல்லை.

10. பக்தர்கள் தேங்காய், பூ பழம் மற்றும் துளசி திருக்கோயிலுக்கு கொண்டு வர அனுமதி இல்லை.

11. முகக்கவசம் அணியாத பக்தர்கள் திருக்கோவில் எல்லையிலேயே தடுத்து நிறுத்தப்படுவார்கள்

12. அர்ச்சகர்களால் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களை தொட்டு சடாரி வைப்பதும், மஞ்சள், துளசி, தீர்த்தம், பூ மற்றும் இதர பிரசாதங்கள் வழங்கப்படவும் மாட்டாது. மஞ்சள், துளசி, பாக்கெட்டுகளில் வழங்கப்படும்.

13. பக்தர்கள் தேங்காய், பூ, பழம் ஆகியவற்றை கொண்டு வர அனுமதி இல்லை.

14. பூஜை மற்றும் அபிஷேகம் நடைபெறும் போது உபயதாரர்கள் உட்பட பக்தர்கள் யாரும் திருக்கோயிலுக்கு உள்ளே அனுமதி இல்லை. அதேபோல திருக்குளத்திற்குச் செல்ல அனுமதி இல்லை.

15. சமூக இடைவெளியை கடைபிடித்து முடிக்காணிக்கை செலுத்துபவர்களுக்கு திருக்கோயில் சார்பாக திருத்தேர் அருகில் உள்ள முடிக்காணிக்கை மண்டபத்திலும் அதன் எதிர்புறம் உள்ள தனியார் இடத்திலும் சமூக இடைவெளியுடன் குளிப்பதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படும்.

கோவிலுக்கு வரும் பக்தர்கள் அனைவருக்கும் குடிநீர் கிடைப்பதற்கான ஏற்பாடுகளையும், தொற்று பரவமாமல் தடுக்க கோவிலைச்சுற்றி பிளீச்சிங் பவுடர் தெளிப்பதையும் நகராட்சி நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும். சுகாதாரத்துறையினரின் அவசர ஊர்தி, தீயணைப்புத்துறையினரின் வாகனம் உள்ளிட்டவைகள் தயார் நிலையில் இருக்க வேண்டும். பொதுமக்கள் கோவிலுக்குள் வரும் நுழைவுவாயில்களில் சுகாதாரத்துறையினரால் சிறப்பு மருத்துவமுகாம்கள் அமைக்கப்பட வேண்டும். பக்தர்கள் அனைவரும் வெப்பாமானிகொண்டு உடல் வெப்பநிலையினை பரிசோதனை செய்யப்பட்ட பின்னரே அனுமதிக்கப்பட வேண்டும். திருக்கோவிலுக்கு பக்தர்களை அதிக எண்ணிக்கயைில் ஏற்றிவரும் ஷேர் ஆட்டோ ஓட்டுநர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். திருக்கோவிலுக்கு போக்குவரத்துத்துறையால் தேவையான எண்ணிக்கையில் பேருந்துகள் இயக்கப்படவேண்டும்.

கொரோனா தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையிலும், தடுக்கும் வகையிலும் அருள்மிகு தான்தோன்றிமலை கல்யாண வெங்கட்ரணமசுவாமி திருக்கோவிலில் நடத்தப்படும் புரட்டாசி திருவிழாவிற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் அனைவரும் முறையாக கடைபிடித்து தங்களின் முழு ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பகவலன்.இகாப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சி.இராஜேந்திரன், குளித்தலை சார் கோட்டாட்சியர் திரு.ஷே.ஷேக்அப்துல்ரகுமான்.இஆப., கரூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.பாலசுப்பிரமணியன், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் திரு.கண்ணதாசன், துணைத்தலைவர் திரு.ந.முத்துக்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) திருமதி.வ.சந்தியா, இந்துசமய அறநிலையத்துறை துணை ஆணையர் திரு. , தாந்தோன்றிமலை திருக்கோவில் துணைஆணையர் மற்றும் செயல்அலுவலர் திரு.நந்தகுமார், கரூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க தலைவர் திரு.வி.சி.கே.ஜெயராஜ், கரூர் மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைத் தலைவர் திரு.நெடுஞ்செழியன், அனைத்து வட்டாட்சியர்கள் உள்பட அனைத்து அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**